# ஆகஸ்ட்– 22 – புதன்

## அரசியான தூய அன்னை மரியா

**“கடைசியானோர் முதன்மையாவர்.முதன்மையானோர் கடைசியாவோர்.”** *மத். 20:16*

## முதல் வாசகம் : ஏசேக்கியல்34 : 1 – 11

ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது.மானிடா! இஸ்ரயேலின் ஆயர்களுக்கு எதிராக இறைவாக்குரை. அவர்களுக்கு இறைவாக்குரைத்துச்சொல். தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே. தாங்களே மேய்ந்துகொள்ளும் இஸ்ரயேலின் ஆயர்களுக்கு ஐயோகேடு! ஆயர்கள் மந்தையையன்றோ மேய்க்க வேண்டும்!நீங்கள் கொழுப்பானதை உண்டு, ஆட்டு மயிராடையை உடுத்தி, மந்தையில் சிறந்ததை அடிக்கிறீர்கள். மந்தையையோ மேய்ப்பதில்லை.நீங்கள் நலிந்தவற்றைத் திடப்படுத்தவில்லை பிணியுற்றவற்றிற்குக் குணமளிக்கவில்லை. காயமுற்றவற்றிற்குக் கட்டுப்போடவில்லை வழிதப்பியவற்றைத் திரும்பக் கூட்டிவரவில்லை. காணாமல் போனவற்றைத் தேடவில்லை. ஆனால், அவற்றைக் கொடுமையுடனும் வன்முறையுடனும் நடத்தினீர்கள்.ஆயன் இல்லாமையால் அவை அலைந்து திரிந்தன. அப்போது எல்லாக் காட்டு விலங்குகளுக்கும் அவை இரையாயின.என் ஆடுகள் எல்லா மலைகளிலும் உயர்ந்த குன்றுகளிலும் அலைந்து திரிந்தன. பூவுலகில் எவ்விடத்திலும் என் மந்தை சிதறுண்டு போனது அதைத் தேடவோ கூட்டிச் சேர்க்கவோ எவரும் இலர்.எனவே ஆயர்களே, ஆண்டவரின் வாக்கைக் கேளுங்கள். தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே் என் மேல் ஆணை! என் மந்தை கொள்ளையிடப்பட்ட். எல்லாக் காட்டு விலங்குகளுக்கும் இரையானது. ஏனெனில் அதற்கு ஆயன் இல்லை. என் ஆயர்கள் என் மந்தையைத் தேடவில்லை. என் மந்தையை அவர்கள் மேய்க்காமல் தாங்களே மேய்ந்து கொள்கிறார்கள்.எனவே, ஆயர்களே! ஆண்டவரின் வாக்கைக் கேளுங்கள். தலைவராகிய ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார் நான் ஆயர்களுக்கு எதிராக இருக்கிறேன். என் மந்தையை அவர்களிடமிருந்து திரும்பப் பெற்றுக்கொள்வேன். மந்தை மேய்ப்பினின்று அவர்களை நீக்கிவிடுவேன். எனவே தாங்களே மேய்ந்துக் கொள்ளும் அவர்கள் இனி என் மந்தையை மேய்க்க மாட்டார்கள். அவர்கள் வாயினின்று என் மந்தையை மீட்பேன். அவை இனி அவர்களுக்கு உணவாகா.எனவே, தலைவராகிய ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார் நானே என் மந்தையைத் தேடிச் சென்று பேணிக் காப்பேன்.

**பதில்பாடல் :** ஆண்டவர் பெயர் இப்பொழுதும் எப்பொழுதும்
வாழ்த்தப் பெறுவதாக.

## நற்செய்தி : மத்தேயு 20 : 1 – 16

அக்காலத்தில் இயேசு தம் சீடரிடம்,”விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம் நிலக்கிழார் ஒருவர் தம் வேலையாள் களை வேலைக்கு அமர்த்த விடியற்காலையில் வெளியே சென்றார்.அவர் நாளொன்றுக்கு ஒரு தெனாரியம் கூலி என வேலையாள்களுடன் ஒத்துக்கொண்டு அவர்களைத் தம் திராட்சைத் தோட்டத்துக்கு அனுப்பினார்.ஏறக்குறைய காலை ஒன்பதுமணிக்கு அவர் வெளியே சென்றபொழுது சந்தை வெளியில் வேறுசிலர் வேலையின்றி நிற்பதைக்கண்டார். அவர்களிடம், ”நீங்களும் என்திராட்சைத் தோட்டத்துக்குப் போங்கள் நேர்மையான கூலியை உங்களுக்குக் கொடுப்பேன்” என்றார்.அவர்களும் சென்றார்கள். மீண்டும் ஏறக்குறைய பன்னிரண்டுமணிக்கும் பிற்பகல் மூன்றுமணிக்கும் வெளியே சென்று அப்படியேசெய்தார்.ஏறக்குறைய ஐந்துமணிக்கும் வெளியேசென்று வேறுசிலர் நிற்பதைக்கண்டார். அவர்களிடம், ”நாள்முழுவதும் வேலைசெய்யாமல் ஏன் இங்கே நின்று கொண்டிருக்கிறீர்கள்?” என்றுகேட்டார்.அவர்கள் அவரைப்பார்த்து, ”எங்களை எவரும் வேலைக்கு அமர்த்தவில்லை” என்றார்கள். அவர் அவர்களிடம், ”நீங்களும் என் திராட்சைத் தோட்டத்துக்குப் போங்கள்” என்றார்.மாலையானதும் திராட்சைத் தோட்ட உரிமையாளர் தம் மேற்பார்வையாளரிடம், ”வேலையாள்களை அழைத்துக் கடைசியில் வந்தவர் தொடங்கி முதலில் வந்தவர்வரை அவர்களுக்குரிய கூலிகொடும்” என்றார்.எனவே ஐந்துமணியளவில் வந்தவர்கள் ஒருதெனாரியம் வீதம் பெற்றுக்கொண்டனர்.அப்போது முதலில் வந்தவர்கள் தங்களுக்கு மிகுதியாகக் கிடைக்கும் என்று எண்ணினார்கள். ஆனால் அவர்களும் ஒருதெனாரியம் வீதம் தான் பெற்றார்கள்.அவர்கள் அதைப் பெற்றுக்கொண்டபோது அந்நிலக்கிழாருக்கு எதிராக முணுமுணுத்து,”கடைசியில் வந்த இவர்கள் ஒருமணி நேரமே வேலைசெய்தார்கள். பகல்முழுவதும் வேலைப் பளுவையும் கடும் வெயிலையும் தாங்கிய எங்களோடு இவர்களையும் இணையாக்கிவிட்டீரே” என்றார்கள்.அவரோ அவர்களுள் ஒருவரைப் பார்த்து, ”தோழரே, நான் உமக்கு அநியாயம் செய்யவில்லை. நீர் என்னிடம் ஒரு தெனாரியம் கூலிக்கு ஒத்துக்கொள்ளவில்லையா? உமக்குரியதைப் பெற்றுக்கொண்டு போய்விடும். உமக்குக் கொடுத்தபடியே கடைசியில் வந்த இவருக்கும் கொடுப்பது என்விருப்பம். எனக்குரியதை நான் என் விருப்பப்படி கொடுக்கக்கூடாதா? அல்லது நான் நல்லவனாய் இருப்பதால் உமக்குப் பொறாமையா?” என்றார்.இவ்வாறு கடைசியானோர் முதன்மையாவர். முதன்மையானோர் கடைசியாவர்” என்று இயேசு கூறினார்.

**தியானம்:** அண்மையில் நமது திருத்தந்தை பிரான்சிஸ் திருஅவையின் அமைப்பற்றி ஒருஅறிக்கை வெளியிட்டார். இதில் அவர் குறிப்பிட்டவிடயம் யாதெனில் “‘திருஅவை’ என்றாலே நம் மனதில் எழுகின்ற ஒழுங்கமைப்பு முதலில் திருத்தந்தை, அதன்பின் கருதினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் கடைசியாக இறைமக்கள் என்பது தான். நிர்வாக அமைப்புரீதியில் இவ்வாறு தோற்றமளித்தாலும், உண்மையில் ‘திருஅவை’யில் திருமுழுக்குப் பெற்ற அவைவருமே சமமாக மதிக்கப்பட வேண்டியவர்களே. ஏனெனில், கடவுள் தாம் விரும்பியபடி தம் அருளையும், இரக்கத்தையும், ஆசீர்வாதத்தையும் எவருக்கு வேண்டுமானாலும் எப்படியும் கொடுக்கமுடியும். ”என்று குறிப்பிடடிருக்கின்றார். ஆம்,தம் ஆடுகளை மேய்க்கத் தவறிய ஆயர்களைப் பற்றி இன்றைய முதல் வாசகத்தில் கடவுளின் இறைவாக்கினர் எசேக்கியேல் வழியாகநாம் முறைப்பாட்டைச் செவிமடுக்கின்றோம். “என் ஆயர்கள் என் மந்தையைத் தேடவில்லை. என் மந்தையை அவர்கள் மேய்க்காமல் தாங்களே மேய்ந்து கொள்ளுகிறார்கள்.”“ஆயன் இல்லாமையால் அவை அலைந்து திரிந்தன. அப்போது எல்லாக் காட்டு விலங்குகளுக்கும் அவை இலக்காகின.” எனவே, நமது விசுவாசத்தைக் காத்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு திருமுழுக்குப் பெற்ற நம் அனைவுக்கும் உரித்தானது. வெறும் சடங்குகள், சம்பிரதாயங்கள், பாரம்பரியங்கள் போன்றவற்றிற்குக் கட்டுப்பட்டு நம் விசுவாசத்தை இழந்துவிடாமல், நம்மாலியன்றளவு பிறருக்கும் நாம் வழிகாட்ட முடிந்தால் இறுதியில் நமக்கும் ஏற்ற சன்மானம் உண்டு.